இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அப்போது இயேசு அன்பொழுக அவரைக் கூர்ந்து நோக்கி, “உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்” என்று அவரிடம் கூறினார். இயேசு சொன்னதைக் கேட்டதும் அவர் முகம்வாடி வருத்தத்தோடு சென்றுவிட்டார். ஏனெனில் அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது. இயேசு சுற்றிலும் திரும்பிப் பார்த்துத் தம் சீடரிடம், “செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம்” என்றார். (மாற்கு 10:21-23)

அகில உலக வறுமை ஒழிப்பு தினம்

‘உலகளாவிய ஒற்றுமையும் உள்ளடக்கிய கொள்கைகளும்’

வறுமை ஒழிப்புக்கான அனைத்துல தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 17 அன்று கொண்டாடப்படுகிறது. இது வறுமையில் வாழும் மக்களுக்கும் பரந்த சமுதாயத்திற்கும் இடையே புரிதல் மற்றும் உரையாடலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வறுமையில் வாடும் மக்களின் முயற்சியையும் போராட்டத்தையும் அங்கீகரிக்கும் வாய்ப்பையும், அவர்கள் தங்கள் கவலைகளைக் கேட்க ஒரு வாய்ப்பையும், வறுமைக்கு எதிராக முதலில் போராடுபவர்கள் ஏழைகள் என்பதை அங்கீகரிக்கும் தருணத்தையும் இந்த நாள் வழங்குகிறது.

1987, அக்டோபர் 17 அன்று பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் உள்ள மனித உரிமைகள் மற்றும் விடுதலைக்கான சதுக்கத்தில் சுமார் ஒரு லட்சம் மக்கள் ஓரணியில் திரண்டனர். பசி, வறுமை, வன்முறை மற்றும் அச்சம் ஆகிய காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக திரண்ட மக்கள் திரள் அது.

வறுமைக்கு எதிரான போராட்டம் என்பது ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகும், இது வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் மற்றும் உலகில் எல்லா இடங்களிலும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையின் மூலமாக வறுமையை ஒழிப்பை முன்னெடுத்த தன்னார்வ தொண்டு நிறுவனமான இன்டர்நேஷனல் மூவ்மெண்ட் ஏடிடி போர்த் வேர்ல்ட் அமைப்பை நிறுவியவர் அவர். சரியாக நான்கு ஆண்டுகளுக்கு பிறகு 1992 வாக்கில் ஐ.நா சார்பில் அதே நாளை உலகில் வறுமையை ஒழிப்பதற்கான சிறப்பு தினமாக அறிவிக்கப்பட்டது.

இந்த நாள் வறுமையை பல பரிமாண நிகழ்வாக அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, இதில் வருமானம் இல்லாமை மற்றும் கண்ணியமாக வாழ்வதற்கான அடிப்படைத்

திறன்கள் இல்லாமை, பாதுகாப்பற்ற வீடுகள், சத்தான உணவு இல்லாமை, சுகாதார வசதி, ஆபத்தான வேலை நிலைமைகள், நீதிக்கான சமமற்ற அணுகல் மற்றும் அரசியல் அதிகாரம் இல்லாமை ஆகிய முக்கியக் கூறுகள் அடங்கும்.

நிலையான வளர்ச்சி இலக்குகள் பின் வருமாறு:

வறுமையின்மை
பசியின்மை
நல்ல உடல் நலமும் வாழ்வும்
தரமன கல்வி
ஆண்-பெண் சம நிலை

வறுமை? ஒரு தனி நபர் அல்லது ஒரு குடும்பம் அடிப்படை அல்லது குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தை பெறுவதற்கான ஆதாரங்கள் ஏதும் இல்லாமல் இருக்கின்ற நிலையே வறுமை. இந்த நிலையில் இருக்கும் மக்களுக்கு போதிய வருமானம் இல்லாத காரணத்தால் வீடு, சுகாதார வசதி, கல்வி உட்பட உயிர் வாழ அவசியமானதாக கருதப்படும் எந்தவித வசதியும் இல்லாமல் இருப்பது.

இதற்கு காரணமாக பல்வேறு காரணிகள் உள்ளன. அதில் முதன்மையானதாக இருப்பது வேலைவாய்ப்பு இல்லாமை. வாழ்வாதாராம் இல்லாத காரணத்தால் அன்றாட வாழ்வுக்கு வேண்டிய அடிப்படை தேவைகள் மறுக்கப்படுகிறது. அதன் காரணமாக அவர்களது குடும்பம் மற்றும் குழந்தைகளின் தேவைகள் மறுக்கப் படுகிறது. அது கல்வி, சுகாதாரம், குடிநீர், உணவு போன்றவற்றை அடக்கி உள்ளது.

நிலையான வளர்ச்சி என்பது மக்களுக்கும் உலகிற்கும் உள்ளடங்கிய, நிலையான மற்றும் வளமிகு எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறது. நிலையான வளர்ச்சியை அடைய, பொருளாதார வளர்ச்சி, சமூக உள்ளடக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய கூறுகளை ஒத்திசைக்க வேண்டியது அவசியமாகும்,

வறுமைக்கு எதிரான போராட்டம் என்பது ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகும், இது வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் மற்றும் உலகில் எல்லா இடங்களிலும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உலக மக்கள்தொகையில் 8.4% அல்லது 670 மில்லியன் மக்கள் கடுமையான வறுமையில் வாழ்கின்றனர். அதே சமயம் உலக மக்கள்தொகையில் 7 சதவிதம் சுமார் 575 மில்லியன் மக்கள் வரும் 2030-ல் கடுமையான வறுமையில் சிக்கித் தவிக்கும் நிலை இருக்கும் என்று கணிக்கப்படுகிறது.

கம்பாரில், 2024 உலக புலம் பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினக் கொண்டாட்டம்

கம்பார்: புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளின் 110வது உலக தினத்துடன் இணைந்து, இங்குள்ள திருஇருதய ஆண்டவர் பங்கு திருஅவைக்கு உள்ளேயும் அதற்கு அப்பாலும் புலம்பெயர்ந்த மற்றும் அகதிகள் தனித்துவத்தைக் கொண்டாடியது. இந்த ஆண்டின் கருப்பொருளாக “கடவுள் தன் மக்களோடு நடக்கிறார்” என்பது தலைப் பாக எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் 28 மற்றும் 29 ஆம் தேதிகளில் நடைபெற்ற இந்த இரண்டு நாள் கொண்டாட்டத்திற்குப் பல்வேறு இடங்களில் மற்றும் பின்னணியில் இருந்து சுமார் 500 பங்கேற்பாளர்களை ஆலய வளாகத்தில் ஒன்றுகூடியது, நம்பிக்கை மற்றும் சமூகத்தின் ஆற்றலுக்குச் சான்றாக

ஆராதனை அதைத் தொடர்ந்து பினாங்கு, பாலிக் புலாவிலிருந்து வந்திருந்த கார்மலைட் சபை அருட்சகோதரிகளின் உருவாக்கப் பயிற்சியடன் கூடிய ஆராதனை வழிபாடு இடம்பெற்றது.

தொடர்ச்சி, அடுத்தப் பக்கம்

புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கில், புது கிறிஸ்தவர்களுக்கான திருப்பலி கொண்டாட்டம்

பெட்டாலிங் ஜெயா: கடந்த செப்டம்பர் 28 அன்று இங்குள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கில் புதுக் கிறிஸ்தவர்களுக்கான திருப்பலி கொண்டாடப்பட்டது. இத்திருப்பலியில் 118 க்கும் மேற்பட்ட புதிய கிறிஸ்தவர்களும் 22 சமீபத்தில் கத்தோலிக்க திருஅவையில் இணைந்தவர்களும் குடும்ப உறுப்பினர்கள், ஆர்.சி.ஐ.ஏ வகுப்பு ஒருங்கிணைப்பாளர்களுமாக 270 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கோலாலம்பூர் மறைமாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு முதல் புதிய கிறிஸ்தவர்களுக்கான திருப்பலி ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இது கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் பேராயருடன் நற்கருணை கொண்டாடும் வாய்ப்பை எற்படுத்திக்கொடுப்பது நோக்கமாகக் கொண்டது. ஆனாலும், இந்த ஆண்டு, பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் கல்ந்துகொள்ள இயலாத நிலையில், புனித பிரான்சிஸ் சேவியர் பங்கின் பங்குத்தந்தை அருள்பணி அல்வின் இங் அவர்களுடன் Msgr. பெஃடரிக் போட்வில் திருப்பலிக்குத் தலைமை தாங்கினார்.

அவரது மறையுரையில், Msgr பேட்ரிக் அவர்கள் நற்செய்தி வாசகத்தைக் குறிப்பிட்டு, "உங்கள் நடத்தைதான் மற்றவர்களை திருஅவைக்குள் சேர்க்கும் காரணியாகும் என்றார். வாழ்க்கை ஒரு பெரிய சவால். யாரும் முழுமையானவர்கள் அல்ல, ஆனால் நமக்கு உதவ இயேசு, அன்னை மரியா மற்றும் புனிதர்கள் உள்ளனர் என்று நிறைவு செய்தார்.

திருப்பலியின் இறுதி ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு முன்பு, ஆறு புது கிறிஸதவர்கள் அவர்களது சாட்சியங்களை வழங்கினர். சாட்சியங்கள் ஆங்கிலம், தமிழ், சின மொழி மற்றும் மலாய் ஆகிய மொழிகளில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

திருஅவையில் யூபிலி ஆண்டு 2025 - யூபிலி கொண்டாட்டங்கள் - பகுதி 1

2024ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் நாள் வத்திக்கான் தூய பேதுரு பெருங் கோவிலில் உள்ள புனிதக் கதவு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் திறக்கப்பட்டதுடன் ஆரம்பமாக இருக்கும், 2025ஆம் ஆண்டிற்கான யூபிலிக் கொண்டாட்டங்கள் ஒவ்வொரு நிலையினராலும் ஒவ்வொரு நாளில் சிறப்பிக்கப்பட இருக்கின்றன. அதுகுறித்த ஒரு நிகழ்ச்சிநிரலின் முதல் பகுதியை இன்றைய நம் நிகழ்வில் காணலாம்.

2025ஆம் ஆண்டு ஜனவரி 24 முதல் 26 வரை உலக சமூக தொடர்புகளுக்கான யூபிலியாக வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலில் சிறப்பிக்கப்பட இருக்கின்றது.

பிப்ரவரி 8 மற்றும் 9 ஆகிய நாள்களில் காவல் படையினர், மற்றும் பாதுகாப்புப் படையினருக்கான யூபிலி நாளாகவும், பிப்ரவரி மாதம் 15 முதல் 18 வரை கலைஞர்களுக்கான யூபிலி நாளாகவும் கொண்டாடப்பட உள்ளது.

பிப்ரவரி 21 முதல் 23 வரை திருத்தொண்டர்களுக்கான யூபிலி நாளாகவும், மார்ச் 8 ம் உதல் 9 தன்னார்வலர்களுக்கான யூபிலி நாளாகவும், மார்ச் 28 24 மணி நேர திருநற்கருணை ஆராதனை நடைபெறும் நாளாகவும் சிறப்பிக்கப்பட இருக்கின்றது. மார்ச் 28 முதல் 30 இறை இரக்கத்தின் மறைப்பணியாளர்களுக்காகவும், ஏப்ரல் 5 முதல் 6 நோயாளிகளுக்காகவும், ஏப்ரல் 25 முதல் 27 பதின்பருவத்தினருக்காகவும், 28 முதல் 29 மாற்றுத் திறனாளிகளுக்காகவும் கொண்டாடப்பட இருக்கின்றது.

மே மாதம் 1 முதல் 4 வரை தொழிலாளர்கள், 4 முதல் 5 வரை தொழில் முனைவோர், 10 முதல் 11 இசைக்கருவிகள் இசைப்பவர்கள், 12 முதல் 14 கிழக்கத்திய திருஅவையினர், 16 முதல் 18 கொன்ப்ரத்தர்னித்தா எனப்படும் உடன்பிறந்த உணர்வு சபையார், மே 30 முதல் ஜூன் 1 வரை குடும்பம் குழந்தைகள், தாத்தா பாட்டிகள், முதியோர் நாளாகவும் கொண்டாடப்பட இருக்கின்றது.

!

வறுமையை ஒழிப்பது தர்மத்தின் பிரச்சினை அல்ல, நீதி மற்றும் மனித உரிமைகளின் பிரச்சினை

மேற்கண்ட வறுமை ஒழிப்புக்கான செய்தியில், ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் பரிமாணங்களிலும் ஒழிப்பதற்கான போராட்டத்தில் யாரையும் விட்டுவிடக்கூடாது என்ற நிலையான வளர்ச்சிக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் முக்கிய உறுதிமொழியை நிலைநிறுத்த அனைத்துலகச் சமூகத்தை வலியுறுத்தினார்.

முதல் பக்கத் தொடர்ச்சி.

மறுநாள், 29 ஆம் தேதி, அன்றைய நடவடிக்கைகளோடு, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கூடிய இறைமக்கள் கலந்து கொண்ட சிறப்பு திருப்பலி கொண்டாடப்பட்டது. திருப்ப்லியின் சிறப்பு அம்மசமாக, "தி பிளஸ்ஸிங்" என்ற தலைப்பைக் கொண்ட காணொளி காண்பிக்கப்பட்டது. நைஜீரியா, தென் கொரியா, பிலிப்பைன்ஸ், மியான்மர், வியட்நாம், திமோர்-லெஸ்டே மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பாரிஷனர்கள் ஒன்பது வெவ்வேறு மொழிகளில் தங்கள் ஆசீர்வாதத்தை வழங்குவதற்காக ஒன்று கூடினர். திருச்சபையின் ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மையைக் குறிக்கும் வகையில் இந்த ஒன்றுகூடல் அமைந்தது.

திருப்பலியைத் தொடர்ந்து, பங்கேற்பாளர்களுக்கு சிறப்பான கூட்டுறவு முறையில் தயாரிக்கப்பட்ட மதிய உணவு வழங்கப்பட்டது. திருஅவையின் இளைய உறுப்பினர்களுக்கு, நாள் முழுவதும் அவர்களை மகிழ்விக்கும் ஏராளமான கேளிக்கை நடவடிக்கைகள் இருந்தன. உள்ளூர் தன்னார்வலர்கள் மற்றும் பெர்மாதாங் திங்கி, நிபோங் தெபால் மற்றும் பட்டர்வெர்த் ஆகியவற்றைச் சேர்ந்த பங்கு மக்கள் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

அருள்பணி சைமன் ஆனந்த் அவரது மறையுரையில், விவிலிய விடுதலைப் பயணத்திற்கும் இக்கல புலம்பெயர்ந்தோரின் அனுபவங்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை விவரித்தார். மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது போல், இஸ்ரயேலர்களின் பயணத்தில் கடவுள் உடன் சென்றது போல், கடவுள் இன்றும் புலம்பெயர்ந்தோருடன் தொடர்ந்து நடந்து, அவர்கள் எதிர்நோக்கும் சவால்களில் அவர்களை வழிநடத்துகிறார் என்று வலியுறுத்தினார்.

நிறைவாக கடவுள் தம் மக்கள் எங்கிருந்து வந்தாலும் அல்லது எங்கு சென்றாலும் அவர்களுடன் இணைகிறார் என்பதை அனைவருக்கும் நினைவூட்டும் வகையில் இந்நிகழ்வு ஒரு நிறைவை எய்தியது.

செல்வம் படைத்தவருக்கல்ல நிலைவாழ்வு !

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 28-ஆம் ஞாயிறு, "ஞானம்" மற்றும் கடவுளுடனான நமது வாழ்க்கை ஆகியவற்றுக்கு இடையேயான இணைப்பு இன்றைய வாசகங்களின் வெளிப்பாடக உள்ளது.

கடவுளின் கொடையான ஞானத்தைப் பெற்றுக் கொண்ட சாலமோன் மன்னர் இந்த ஞானத்திற்கு முன் ஏனைய செல்வங்களெல்லாம் மணலுக்கு சமமானது என்று கருதினார் என்று முதல் வாசகம் கூறுகிறது. அடுத்து வரும் இரண்டாம் வாசகமானது, இறைவனின் பார்வையினின்று எவ்விதமான செயல்களையும் நாம் மறைக்க இயலாது என்று வலியுறுத்துகிறது.

இன்று ஒருசிலர், கையில் பணம் இருந்தால் எதையும் விலைகொடுத்து வாங்கிவிடலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கின்னர். கையில் பணமிருந்தாலும் விலை கொடுத்து வாங்கமுடியாதவை எத்தனையோ இருக்கின்றன. அவற்றில் முதன்மையானது நிலைவாழ்வு. இன்றைய நற்செய்தியில் இயேசுவிடம் வருகின்ற செல்வரும் (மத் 19: 29), தலைவருமான (லூக் 18: 18) இளைஞர், தன்னிடம் பணம் இருந்ததால், தன்னால் நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள முடியும் என்ற எண்ணத்தோடு அவரிடம், “நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?” என்கிறார். அப்பொழுது இயேசு அவரிடம், “உமக்கு உள்ளதை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்” என்றதும், அவர் முகம் வாடி வருத்தத்தோடு செல்கின்றார்.

செல்வம் வைத்திருப்பதால் அல்ல, அதை ஏழைகளுக்குக் கொடுப்பதால் நிலைவாழ்வு உரிமையாக்கிக் கொள்ளலாம் என்று இயேசு சொன்னதும், அவர் வருத்தத்தோடு செல்கின்றார். இந்த இளைஞரிடம் இரண்டு குறைகள் இருந்தன. ஒன்று, தன்மீது அன்புகூர்ந்ததுபோல் தனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூராதது (லேவி 19: 18). ஒருவேளை அவர் தன்மீது அன்பு கூர்ந்ததுபோல், தனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்ந்திருந்தால், தன்னிடம் இருந்ததை ஏழைகளுக்குக் கொடுத்திருப்பார். அவர் தன்னிடம் இருந்ததை அடுத்திருப்பவருக்குக் கொடுக்காததன் மூலம், அடுத்திருப்பவர்மீது அன்புகூர வேண்டும் என்ற ஆண்டவரின் கட்டளையை மீறுகின்றார்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகம், கடவுளின் வார்த்தை எத்துணை ஆற்றல் வாய்ந்து என்று கூறுகின்றது. ஒருவர் ஆற்றல் வாய்ந்த கடவுளின் வார்த்தையின்படி வாழ்கின்ற போது... சாலமோனின் ஞான நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல்வாசகத்தில் நாம் வாசிப்பதுபோன்று, நாம் கடவுளிடம் மன்றாடுவதால் கிடைக்கின்ற இறை ஞானத்தின்படி நடக்கின்றபோது நம்மால் கடவுள் தரும் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள இயலும் என்பது உறுதி.

எனவே, நாம் இயேசுவின்மீது நம்பிக்கை கொண்டு, அந்த நம்பிக்கையை நமது செயலில் வெளிப்படுத்துவோம். அதன் வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

-ஆர்.கே.

பொதுக்காலம்-28-ஆம் ஞாயிறு

முதல் வாசகம்:	சா.ஞான 7:7-11
திரு.பாடல்	90: 12-13.14-15.16-17
2-ம் வாசகம்	எபி 4: 12-13
மாற்கு	மாற்கு 10:17-30

ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)
வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2
திருப்புகழ் மாலை- வாரம் 4